**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 2/2024**

**பி. வா.சா. 1 - மரிய ஆரோக்கியம்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 27.11.2025.**

**2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

ஆல்பட் ராஜும், ஞானசேகரும் எனது கணவரின் நண்பர்கள் என்றால் சரிதான். ஆல்பட்ராஜ் எனது கணவர் எழுதிய இரண்டு உயில்களிலும் முதலாம் சாட்சி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவர் உடல்நிலை சரியல்லாமல் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது வழக்கிற்காக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கடைசி காலங்களில் நான் எனது கணவருடன் சேர்ந்து தான் இருந்தேன் என்றால் சரிதான். எனது கணவரை வற்புறுத்தியோ துன்புறுத்தியோ எனது குழந்தைகள் வெளியே அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் விருப்பத்துடன் தான் எனது குழந்தைகள் வெளியே அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். எனது ஒரு மகனான வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் சுயநினைவுடன் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் இரண்டாவதாக எழுதியதாக குறிப்பிடப்படும் உயில் எழுதுவதற்கு சாத்தியம் இல்லை என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**